# QB365 Question Bank Software Study Material

## சுற்றுச்சூழல் பொருளியல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) சுற்றுச்சூழல் என்பதன் பொருள் கூறுக.

**பதில் :** சுற்றியிருப்பவைகள் என்ற பொருள்படும் "Environia" எனும் பிரெஞ்ச் சொல்லிலிருந்து தோன்றியது சுற்றுச்சூழல்.
சுற்றுச்சூழல் என்பது, நம்மை சுற்றியுள்ள அனைத்து நிலைமைகள், சூழ்நிலைகள், உயிர்கள், அல்லது உயிர் தொகுப்பு ஆகியவைகளை குறிப்பிடுவது ஆகும்.

2) சூழலியல் என்றால் என்ன?

**பதில் :** ஒரு குறிப்பிட்ட பகுதியில் இருக்கும் உயிரினங்களும், உயிரற்றவைகளும் (தட்பவெப்ப நிலை, பூமி, மண், வளிமண்டலம், பருவ நிலை) ஆகியவற்றிற்கிடையேயான தொடர்பே சூழல் அமைப்பு எனப்படுகிறது.

3) தலா (per capita) கரிமில வாயு அதிகமாக வெளியேறும் நாடுகள் யாவை?

**பதில் :** 1. சவுதி அரேபியா
2. ஆஸ்திரேலியா
3. அமெரிக்கா
4. கனடா
5. தென் கொரியா

4) சுற்றுச்சூழல் பண்டங்கள் என்றால் என்ன? உதாரணம் கூறு.

**பதில் :** சுற்றுச்சூழல் பண்டங்கள் என்பவை அங்காடியிடா பொருட்களான தூய்மை காற்று, பசுமையான போக்குவரத்து உள்கட்டமைப்பு, பொது பூங்காக்கள், ஆறுகள், மலைகள், பசுமை, வழிகள், கடற்கரை முதலானவையாகும்.

5) ஒலிமாசுவினை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளை கூறுக.

**பதில் :** ஒலித்தடைகளை ஏற்படுத்துதல்
போக்குவரத்து நெரிசல் கட்டுப்பாடு
ஒலி பெருக்கிகளைக் கட்டுப்படுத்துதல்
பெரிய ஊர்தி செல்லும் நேரத்தைக் கட்டுப் படுத்துதல்

6) உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு

**பதில் :** நிலத்தின் மேற்பரப்பில் (நிலமும் நீரும்) தற்பொழுது ஏற்பட்டுள்ள தட்ப வெப்ப நிலை அதிகரிப்பு புவி வெப்பமயமாதல் என்கிறோம்.

7) விதைப்பந்து என்பதன் பொருள் கூறுக.

**பதில் :** ஒரு விதை மண்ணால் மூடி வைக்கப்படுகிறது.
அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும்.
பின்பு அது உலர்த்தப்பட்டு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம்.
இவ்வாறு செய்யும் போது, அந்த விதை முன்பே நடப்பட்டுவிட்டது என்றே பொருள்.

8) பசுமைக் குடில் வாயுக்கள் யாவை?

**பதில் :** கரியமில வாயு, மீத்தேன், குளோரோ புளோரோ கார்பன், நைட்ரஸ் ஆக்ஸைடு.

9) மாசுபடுதல் என்றால் என்ன?

**பதில் :** இயற்கை சூழலில் தீங்கு விளைவிக்கக் கூடிய அசுத்தங்கள் சேருவதையே மாசுபடுதல் என்கிறோம்.

10) இயற்கை பண்ணை முறை என்றால் என்ன?

**பதில் :** (i) இயற்கைப் பண்ணை முறை என்பது கால்நடை சாணம், இயற்கை கழிவுகள் ஆகியவற்றை உரமாகவும் பயிர் பூச்சி மருந்துகளை பயன்படுத்தியும், பருப்பு வகைகள் பயிரிட்டு பயிர்ச் சுழற்சி முறையையும் பயன்படுத்தி செய்யப்படும் வேளாண்மையாகும்.
(ii ) இதில் ரசாயன உரங்களும் பூச்சிக் கொல்லி மருந்துகளும் பயன்படுத்தப்படுவதில்லை.

**3 மதிப்பெண் வினாக்கள்** 10 x 3 = 30

11) பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் உள்ள தொடர்பினை சுருக்கமாக கூறு.

**பதில் :** சமூக, அரசியல், அறவியல், தத்துவ, பொருளாதார அமைப்பு முறைகள் மனித வாழ்வினை தீர்மானிக்கின்றன. மனிதன் தனது வாழ்வாதாரத்திற்காக இயற்கையிலுள்ள மற்ற உயிரினங்களுடனும், உயிரற்ற பொருட்களுடனும் இணைந்துள்ளதால் அவனது வாழ்க்கை முறையைச் சுற்றுச்சூழலே பெருமளவு தீர்மானிக்கிறது.
பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையேயான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ் ஆகியோர் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை" வகுத்தளித்துள்ளனர்.
மொத்த பொருளியல் செயல்பாடுகள் உள்ளிடு பொருள்கள், வெளியீடு ஆகியவற்றிற்கிடையே சமமான ஓட்டமாக உள்ளது என்று கருதப்படுகிறது.

12) பொருள்சார் சமநிலை அணுகுமுறையின் பொருள் குறிப்பிடுக.

**பதில் :** பொருளாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் இடையே யான தொடர்பினை விளக்க ஆலன் நீஸ் மற்றும் R.V. அய்யர்ஸ் "பொருள்சார் சமநிலை அணுகுமுறை" வகுத்துள்ளனர்.
"உற்பத்தி முறைக்குள் உள்நுழையும் எந்தவொன்றும் பிறகு வெளியேறித்தான் ஆக வேண்டும். என்பதனை வலியுறுத்துகிறது.
இயற்பியலின் பொருள் மற்றும் ஆற்றல் பாதுகாப்பிற்கான வெப்ப இயக்கவியல் முதல் விதி.
இவ்விதியை ஆதாரமாகக் கொண்டு சுற்றுச் சூழலுக்கும் பொருளாதாரத்திற்குமான தொடர்பினை விளக்குவதுதான் மேற்சொன்ன பொருள்சார் சமநிலை அணுகுமுறையாகும்.

$M = G - (R_C - R_P) + (R^r_P + R^r_c) = R^d_P + R^d_c$

| | | | | |
|---|---|---|---|---|
| இயற்கை உலகிலிருந்து பெறப்படும் மூலப் பொருட்களும் சக்தியும் (M) | = | பொருளாதார நடவடிக்கைகள் உற்பத்தியில் பணிகளும் (G) - நுகர்ச்சிலும் உற்பத்தியிலும் ஏற்படும் கழிவுகள் $(R_c + R_p)$ + மறுசுழற்சி செய்யப்பட்ட உற்பத்தியும் நுகர்ச்சிக் கழிவுகளும் $(R_p^r + R_c^r)$ | = | இயற்கை உலகில் இறுதியாக விடப்படும் உற்பத்தியும் நுகர்ச்சிக் கழிவுகளும் = $(R_p^d + R_c^d)$ |

13) பல்வகையான காற்று மாசுகளை விளக்குக

**பதில் :** **உட்புறக் காற்று மாசு :** மனிதர்களின்வாழிடத்திற்குள் தீங்கு விளைவிக்கக்கூடிய மாசுகள், காற்றில் கலந்திருப்பதை உட்புற காற்று மாசு என்கிறோம். எ.கா. திட எரிபொருட்களைக் கொண்டு சமையல் செய்கின்றபோது உட்புறக் காற்று மாசு அடைகின்றது.
**வெளிப்புறக் காற்று மாசு :** காற்று மண்டலத்தில் திட, திரவ, அல்லது காற்று வடிவ மாசுகள் கலந்திருப்பதே வெளிப்புற காற்று மாசு எனப்படுகிறது. தொழிற்சாலைகளாலும், மோட்டார் ஊர்திகளாலும் வெளிப்புறக்காற்று மாசு அடைகின்றது.

14) நீர்மாசுக்கான காரணங்கள் யாவை?

**பதில் :** **கழிவு நீரும் தேவையற்ற நீரும் வெளியேற்றப்படுதல்:**
பல இடங்களில் இருந்து வருகின்ற சாக்கடைத் தண்ணீர், கழிவு நீர் குப்பைகள், வேளாண்மைக் கழிவுகள், தொழிற்சாலைக் கழிவுகள், நீர் நிலைகளில் கொட்டப்படுகின்றன.
இத்தகைய கழிவுகளில் உள்ள நச்சுப் பண்டங்கள் தண்ணீரை மாசுபடுத்தி நச்சுத்தன்மை உள்ளதாக மாற்றுகின்றன.
**திடக் கழிவுகள் குவித்தல் :** திடப்பொருள் கழிவுகளை நீர் நிலையில் கொட்டுதல், நீர் நிலையுடன் கலந்துவிடுமாறு விட்டுவிடுதல்.
**எண்ணெய் சிந்துதல் :** கப்பல்களில் குறிப்பாக எண்ணெய்க் கப்பல்களின் எண்ணெய் கடல்நீரை மாசுபடுத்துகின்றது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.
**அமில மழை :** காற்று மாசுவால் அமில மழை ஏற்பட்டு நீர் மாசு ஏற்படுத்துகின்றது. காற்று மாசுவில் உள்ள அமிலத் துகள்கள் தண்ணீர் ஆவியுடன் கலந்து அமில மழையை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.
**புவி வெப்பமடைதல் :** புவி வெப்பமடைதல் காரணமாக நீரின் வெப்பநிலை அதிகரித்து நீர்வாழ் உயிரினங்களைப் பாதிக்கின்றது.

15) இ-கழிவுகள் என்பதன் பொருள் தருக.

**பதில் :** செய்தி, தொழில்நுட்ப வளர்ச்சியில் E-கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன.
இவை குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள், (Air conditioners), கைபேசிகள், கணினிகள் முதலான பெருமளவில் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் மின்னணுச் சாதனங்களை உள்ளடக்கியவையாகும்.
தொலைசாதனம், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கம்பியில்லா கருவிகள் முதலான வீட்டு பயன்பாட்டு பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும் போதோ E-கழிவுகள் தோன்றும்.

16) நில மாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.

**பதில் :** **நில மாசு:** "கழிவுகளைக் கொட்டுவதால் நிலம் தரக்குறைவானதாக மாறும். சுற்றுச்சூழலில் கொட்டப்படும் பல திட, திரவ, வாயுப் பண்டங்கள் நிலத்தின் தன்மையைக் கெடுத்துவிடுதல் நிலமாசு ஆகும்".
**நிலமாசுவிற்கான காரணங்கள் :**
**காடுகளை அழித்தல் :** காடுகளை அழித்து நிலமாக மாற்றுவது சுற்றுச்சூழல் பாதிப்புக்கு முக்கியமான காரணியாக விளங்குகின்றது.
**வேளாண்மை நடவடிக்கைகள்:** உழவர்கள் அதிக நச்சுத் தன்மை கொண்ட உரம், பூச்சி மருந்து ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் நிலம் நச்சுத் தன்மை அடைகின்றது.
**சுரங்கத் தொழில்கள்:** கனிமங்களை வெட்டி எடுக்கும் போதும், சுரங்கங்கள் அமைக்கப்படும் போதும் நிலம் மாசு அடைகின்றது.
**மண்ணில் புதைத்தல் :** ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு ஆண்டிலும் டன் கணக்கில் குப்பையை உற்பத்தி செய்கின்றது. மறுசுழற்சி செய்ய முடியாத கழிவுகள் நிலத்தில் புதைக்கப்பட்டு நிலமாசு அதிரிக்கக் காரணமாக உள்ளது.
**கட்டுமானப் பணிகள் :** மக்கள் தொகை வளர்ச்சி, நகர்ப்புறமாதல் ஆகியன காரணமாக கட்டடங்களின் வளர்ச்சி அதிகமாக உள்ளது. அதனால், மணல், மரம், கம்பி, சிமெண்ட், செங்கல், நெகிழிப் பண்டங்கள் ஆகியவற்றின் கழிவுகள் குப்பைகளாகப் புறநகர்ப் பகுதிகளில் கொட்டப்படுகின்றன. இதன் காரணமாக நிலம் மாசடைகின்றது.
**அணுமின் கழிவுகள்:** அணுமின் நிலையங்களிலுள்ள கழிவுகளான கதிர்வீச்சுப் பண்டங்கள், நச்சுத் தன்மை கொண்ட தீமை விளைவிக்கும் வேதிப்பண்டங்கள் மனித நலத்தைப் பாதிக்கின்றது. இதன் மூலமும் நிலம் மாசுபடக் கூடும்.

17) குறிப்பு வரைக.
அ) பருவநிலை மாற்றம்
ஆ) அமில மழை

**பதில் :** **(அ) பருவநிலை மாற்றம்:** வளிமண்டலத்தில் பசுமைக் குடில் வாயுக்களின் அளவுகள் வளர்ந்துகொண்டே செல்வதால் நீண்ட காலத்தில் ஏற்படும் பருவநிலை மாறுபாடுகளே "கால நிலை மாற்றம்" எனப்படும்.
**(ஆ) அமில மழை (Acid Rain) :**
காற்று மாசுவின் விளைவே அமில மழை ஆகும்.
தொழிற்சாலைகள், ஊர்திகள், கொதிப்பான்கள் முதலானவை வெளியிடும் வாயுக்கள் வளிமண்டலத்தில் உள்ள நீர்த்துகள்களோடு இணையும்போது அமிலமழை ஏற்படுகின்றது.
இந்த வாயுக்கள் நைட்ரஜன் ஆக்ஸைடு, சல்பர் டை ஆக்ஸைடு, சல்பர் டிரை ஆக்ஸைடு ஆகியவை தண்ணீரோடு கலக்கின்ற போது சல்பரஸ் அமிலம், நைட்ரிக் அமிலம், சல்பியூரிக் அமிலம் ஆகியவையாக மாறுகின்றன.

18) நில மாசுவின் வகைகளைக் கூறுக.

**பதில் :** 1) திடக்கழிவு:
தாள்கள், நெகிழிப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், உணவுப் பொருட்கள், நகராட்சி கழிவுகள், மருத்துவ கழிவுகள், பழுதடைந்த மின்னணுப் பொருட்கள் இதில் அடங்கும்.
2) பூச்சிக்கொல்லி மற்றும் இரசாயன உரங்கள்:
விவசாய உற்பத்தி பெருக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வேதியியல் பொருட்கள் ஏற்படுத்தும் மாசு.
3) காடுகளை அழித்தல்:
மரங்கள் வெட்டப்படுவதால் மண் அரிப்பு ஏற்படுகிறது. காடுகள் அழிக்கப்படுவதால் நிலம் மாசடைகிறது.

19) நில மாசுவின் விளைவுகளைக் கூறுக.

**பதில் :** 1. மண் மாசுபடுகிறது.
2. உடல் ஆரோக்கிய கேடு.
3. காற்று மாசுபாடு.
4. விலங்குகள் மீதான பாதிப்பு.

20) இயற்கை பண்ணையின் பொதுவான கொள்கைகள் யாவை?

**பதில் :** (i) சுற்றுச்சூழலை பாதுகாத்தல், மண் அரிப்பைக் கட்டுப்படுத்துதல், மண் வளக்குறைவை தடுத்தல், உயிரியல் உற்பத்தியை உத்தமப்படுத்துதல் மற்றும் சிறந்த உடல் நலத்தை ஊக்குவித்தல்.

(ii) மண்ணுக்குள் உயிரியல் நடவடிக்கை மேம்படுத்தி மண்ணின் வளத்தன்மையை அதிகரித்தல்.

(iii) அமைப்புக்குள் உயிரியல் மாற்றங்களை நிலைத்திருக்க செய்தல்.

(iv) நிறுவனத்தின் பொருட்களையும் வளத்தையும் அதிக அளவு மறுசுழற்சிக்கு உட்படுத்துதல்.

(v) கால்நடைகளை நன்கு பராமரித்து அவற்றின் நலத்தை மேம்பாடு அடையச் செய்தல்.

(vi) எல்லா உற்பத்தி நிலைகளிலும் இயற்கை நேர்மையையும் முக்கிய பண்புகளையும் கடைபிடித்து கையாள்வதிலும் பதப்படுத்துதலிலும் கவனமாக இருந்து இயற்கை பொருட்களை தயாரித்தல்


(vii) அப்பகுதியிலுள்ள அமைப்பு சார்ந்த விவசாய முறைகளிலுள்ள மறுசுழற்சி செய்யும் வளங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

## <u>5 மதிப்பெண் வினாக்கள்</u>

5 x 5 = 25

21) மொத்த தேசிய உற்பத்திக்கும் சுற்றுச்சூழல் தரத்திற்கும் இடையேயான தொடர்பினை சுருக்கமாக விளக்குக.

**பதில் :** சுற்றுச்சூழல் தரம் என்பது சுற்றுச்சூழல் பண்புகளின் தொகுப்பாகும்.
இன்னும் தெளிவாகக் கூறுவது என்றால் அப்பண்புகள் ஒவ்வொன்றின் அளவும் எவ்வளவு இருக்க வேண்டும் என்ற தொகுப்பின் குறியீட்டு எண் ஆகும்.
இத்தரம் பொதுவாகவும் நிர்ணயிக்கப்படலாம் அல்லது குறிப்பிட்ட பகுதிக்கான சூழ்நிலையின் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படலாம்.
மனிதன் மீதும் இதர உயிரினங்களின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துவதால் சுற்றுசூழல் தரம் (நிர்ணயம்) என்பது மிகக் கவனத்துடன் கையாளப்பட வேண்டிய ஒன்றாகிறது.





முதலாளித்துவ செயல்முறைகளினால் சுற்றுக்சூழல் தரம் தொடர்ந்து சரிந்து கொண்டே வருகின்றது.
சுற்றுச்சூழல் என்பது ஒரு பொதுப் பொருளாகும். இப்பொருள் அனைவராலும் நுகரப்படும்.
எந்த ஒரு தனிப்பட்ட நபரையும் அதைப் பயன்படுத்துவதிலிருந்து விலக்கி வைக்க முடியாது. ஒருவர் அப்பொருளைப் பயன்படுத்துவதால், மற்றவர்களுக்குக் கிடைக்கும் அளவு குறைந்து போகாது.
மேலும், அவற்றைப் பயன்படுத்துவதற்கான இறுதி நிலைச் செலவு கிட்டத்தட்ட சுழியம் ஆகும். இத்தகைய வளங்கள் குறைந்து கொண்டே செல்கின்றன.
இயற்கை வளங்களின் குறைவும் தேசிய வருமானத்தில் இயற்கை வளங்களின் பங்களிப்பும் தற்பொழுதுள்ள தேசிய வருவாய் கணக்கீட்டில் அளவிடப்படுவதில்லை.

22) புற விளைவுகள் என்று கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக

**பதில் : புற விளைவுகளின் பொருள் :**

புற விளைவுகள் அங்காடிகளுக்கு வெளியே நடைபெறுகின்றது.
உற்பத்தி அல்லது நுகர்ச்சியில் ஈடுபட்டுள்ள மக்களை நேரடியாகப் பாதிப்பதில்லை.
எனவே இவைகள் சிதறிய விளைவுகள் எனப்படுகின்றது.

**புற விளைவுகள் - இலக்கணம்:** 'தனி மனிதர்களின் நுகர்ச்சி அல்லது உற்பத்தி ஆகிய பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக, அந்நடவடிக்கைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்குபெறாத சமுதாயத்திலுள்ள மற்றவர்களுக்கு ஏற்படும் செலவு அல்லது பயன் புறவிளைவுகள் எனப்படும்'.




**புற விளைவுகளின் வகைகள்:**

**நேர்கணிய நுகர்ச்சிப் புறவிளைவு (Positive Consumption Externality):**

ஒருவருடைய நுகர்ச்சிச் சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச் சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்துவது ஆகும்.
(எ.கா): ஒரு நகரில் உள்ள சிலர் ஏற்பாடு செய்கின்ற தனியார் பாதுகாப்பு அப்பகுதியில் குடியிருக்கும் மற்றவர்களுக்கும் செலவில்லாமல் பாதுகாப்பை ஏற்படுத்துகின்றது.

**எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு (Negative Consumption Externality) :**

ஒருவருடைய நுகர்ச்சிச் சார்பு மற்றொருவருடைய நுகர்ச்சிச் சார்பில் பாதகமான விளைவினை ஏற்படுத்துவது எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு என்கிறோம்.
ஒருவர் தனது வீட்டில் ஒலிபெருக்கி மூலம் பாடலை அதிக சத்தத்தில் பாடவிடுகிறார். அது அவருக்குப் பயன்பாட்டினைத் தருகிறது.
ஆனால், அருகிலுள்ள வீட்டில் உள்ள மற்றொருவருக்கு அந்த ஒலி மாசு தொந்திரவினை ஏற்படுத்துகிறது எனில், அது எதிர்மறை நுகர்ச்சிப் புறவிளைவு எனப்படுகிறது.

**நேர்கணிய உற்பத்தி புறவிளைவு (Positive Production Externality):**

ஒருவருடைய உற்பத்திச் சார்பு மற்றொருவருடைய உற்பத்தி சார்பில் சாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அது நேர்கணிய உற்பத்திப் புறவிளைவு என்கிறோம்.
எடுத்துக்காட்டாக, ஒருவர் தேனீ வளர்ப்புத் தொழிலை செய்து வருமானம் ஈட்டி வருகிறார். அருகிலுள்ள மற்றொரு உழவர் தனது பண்ணையில் பழமரங்களை வளர்த்து வருகிறார்.
தேனீக்களினால் ஏற்படும் மகரந்தச் சேர்க்கையின் காரணமாக இரண்டாமவருக்கு அதிகமான பழவிளைச்சலையும், வருமானத்தையும் பெறுவது நேர்கணிய உற்பத்திப் புறவிளைவு என்கிறோம்.

**எதிர்மறை உற்பத்திப் புறவிளைவு (Negative Production Externality):**

ஒருவருடைய உற்பத்திச் சார்பு, அடுத்தவருடைய உற்பத்திச் சார்பினில் பாதகமான விளைவினை ஏற்படுத்தினால் அது எதிர்மறைப் புறவிளைவு என்கிறோம்.
எடுத்துக்காட்டாக, ஒரு சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் காற்று மாசுபாட்டினால், அருகிலுள்ள உழவரின் நெல்விளைச்சல் பாதிக்கப்படுகிறது. இது எதிர்மறை உற்பத்திப் புறவிளைவு எனப்படுகிறது.

23) நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சி முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

**பதில் :** இப்போதுள்ள சந்ததியினருக்கு மட்டுமின்றி எதிர்காலச் சந்ததியினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்து விட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்.
மேல்தட்டு மக்களின் ஆடம்பர விருப்பங்கள் மட்டுமல்லாது ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான, உணவு, துப்புரவு, உடல்நலம், கல்வி முதலானவற்றையும் அளிக்க வேண்டும்.

**நீடித்த நிலையான மேம்பாட்டின் நோக்கங்கள்**

1. எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.
2. அனைத்து வயதினரின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.
3. எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக்கொள்ள வசதி செய்தல்.
4.பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.
5. குடிநீரும், துப்புரவும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
6. தூய்மையான, நீடித்த, நிலையான, எளிதில் பெறக்கூடிய, சக்தியினை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
7. தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
8. நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கு இடையேயும் உள்ள சமமின்மையை அகற்றுதல்.
9. பாதுகாப்பான, அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்
10. நீடித்த நிலையான உற்பத்தியையும் நுகர்வினையும் உறுதிப்படுத்துதல்.

24) திடக்கழிவுகள் -வரையறு.

**பதில் :** 1. மனித நடவடிக்கைகளில் பயனில்லாத தேவையற்ற பொருட்களைக் கழிப்பதே "திடக்கழிவுகள்"ஆகும்.
2. அவை திடப் பொருட்களாகவோ அல்லது பகுதி திடப் பொருட்களாகவோ அல்லது திரவமாகவோ இருக்கும்.
எ.கா: i) வீட்டுக்கழிவுகள்,
ii) மருத்துவமனைக்கழிவுகள்
iii) கட்டுமானத்துறை கழிவுகள்
iv) விவசாயக் கழிவுகள்
v) தொழிற்சாலைக்கழிவுகள்.

25) இயற்கைப் பண்ணையின் பொதுவான கொள்கைகள் யாவை?

**பதில் :** 1. சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மண் அரிப்பை கட்டுப்படுத்தல், மண்வளக்குறைவைத் தடுத்தல், உயிரியல் உற்பத்தியை உத்தமப்படுத்தல் மற்றும் சிறந்த உடல் நலனை ஊக்குவித்தல்.
2. மண்ணுக்குள் உயிரியல் நடவடிக்கைகளை மேம்படுத்தி மண்ணின் வளத்தன்மையை நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்கச் செய்தல்.
3. அமைப்புக்குள் உயிரியல் மாற்றங்களை நிலைத்திருக்கச் செய்தல்.
4. நிறுவனத்தின் பொருட்களையும் வளத்தையும் அதிக அளவு மறு சுழற்சிக்கு உட்படுத்துதல்.
5. கால்நடைகளை நன்கு பராமரித்து அவற்றின் நிலத்தை மேன்மையடையச் செய்தல்.
6. எல்லா உற்பத்தி நிலைகளிலும் நேர்மையையும், முக்கிய பண்புகளையும் கடைப்பிடித்து இயற்கை பொருட்களைத் தயாரிக்க வேண்டும்.